09.03.2026 OS.No.83/2022 PW1 Name :.**ஏகாம்பரம்**

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கபட்டு குறுக்கு விசாரணை**

1. நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். மேஸ்திரி வேலை செய்கிறேன். அந்த விவரத்தை வழக்கில் குறிப்பிட்டுள்ளேன். என்ன நிவாணரத்திற்காக வழக்கு போட்டுள்ளேன் என்று தெரியும். கட்டாய பதிவிற்காக வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் தற்போது நியாபகம் இல்லை. சொத்தின் விஸ்தீரணம் தற்போது நியாபகம் இல்லை. வழக்கு சொத்தின் செக்குபந்தி விவரம் சரியாக நியாபகம் இல்லை. வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியபட்டது என்பது தெரியும்.
2. மாணிக்கத்திற்கு சொந்தமானது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டா எண். 129. தனியாக பட்டா ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மாணிக்கம் தற்போது உயிருடன் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்று தெரியவில்லை. வாரிசுகள் பற்றிய விவரம் சரியாக நியாபகம் இல்லை. மாணிக்கத்தின் பூர்வீகம் எனக்கு தெரியாது. மாணிக்கத்தின் மனைவியை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. அவரது மனைவி பெயர் சரியாக நியாபகம் இல்லை.
3. பிரதிவாதிகள் என்னுடன் வேலை செய்த வகையில் எனக்கு பழக்கம். நானும் பிரதிவாதிகளும் மேஸ்திரி வேலை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தவிர வேறு வழக்குகள் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதில் விவரம்

தெரியும். கடன் பெற்றதாகவும் அதற்கு வட்டி கொடுத்துள்ளதாகவும் பொய்யாக பதிலில் கூறியுள்ளார்கள். வழக்கு சொத்தை நேரில் பார்த்துள்ளேன். வழக்கு சொத்தில் வீடு உள்ளது. அது மோல்டிங் வீடு ஆகும். கதவு எண் சரியாக தெரியாது. மின் இணைப்பு எண் சரியாக நியாபகம் இல்லை. வழக்கு சொத்து வளையாம்பட்டு பஞ்சாயத்திற்கு சொந்தமானது.

4. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேன். தேதி சரியாக நியாபகம் இல்லை. நான்கு நபர்கள் மீது அறிவிப்பு கொடுத்துள்ளேன் அவர்களது பெயர் நியாபகம் இல்லை. 2 நபர்கள் வாங்கியுள்ளார்கள் 2ம் நபர்கள் அதை வாங்கவில்லை. பதிவு செய்து கொடுக்காத காரணத்தினால் அதை கொடுத்தேன் மற்ற விவரம் எனக்கு தெரியாது. சார்பதிவாளர் அலுவலத்தில் நான் எந்த தேதியில் காத்திருந்தேன் என்று சரியாக நியாபகம் இல்லை. அதற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை. பதில் அறிவிப்பு கொடுத்துள்ளது பற்றி சரியாக நியாபகம் இல்லை. அடமான கடன் பத்திரம் எழுதுவதாக கூறி பிரதிவாதிகளை ஏமாற்றி மோசடியாக கிரையம் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதிகள் எனக்கு சேரவேண்டிய அசல் மற்றும் வட்டியை பெற்று கொண்டு ஆவணத்தை ரத்து செய்ய மறுத்துள்ளேன் என்றால் சரியல்ல. படிப்பறிவில்லாத பிரதிவாதிகளை ஏமாற்றி கிரைய ஒப்பந்தம் பெற்றுள்ளதால் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. மறு அறிவிப்பிற்கு மறுப்பு அறிவிப்பு கொடுத்துள்ளேன். அவ்வாறு எந்த அறிவிப்பு கொடுக்கபடவில்லை என்றால் சரியல்ல. ரவியின் மனைவியும் மகனும் சாட்சிகளாக கையெழுத்து போட்டுள்ளார்கள். என்

தரப்பில் யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை. வா.சா.2 கூறியுள்ள குறுக்கு விசாரணை சாட்சியம் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல.

6. பிரதிவாதிகள் தான் ஆவணம் தயார் செய்ய ஏற்பாடு செய்தனர். யார் தட்டச்சு செய்தார்கள் என்ற விவரம் தெரியும். ராஜசேகர் என்பவர் பத்திரம் எழுதினார். அவரை சாட்சியாக விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் மாணிக்கம். பிரதிவாதியின் பெயரை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. தேவையில்லாத தரப்பினர்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 09/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.09 16:49:00 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.